

பாடம் 1

மார்ச் 30-ஏப்ரல் 5

# சகல யுத்தங்களுக்கும் பின்னணி யுத்தம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** வெளி 12:7–9; எசே 28:12–15; ஏசா 14:12–14; ஆதி 3:15; யோவான் 17:24–26.

**மனன வசனம்:** வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று'. வெளி 12:7,8.

தேவன் நல்லவர் என்றால், உலகம் ஏன் மிகமோசமாக இருக்கிறது? அன்பான ஒரு தேவன் எவ்வாறு இவ்வளவு தீமையை அனுமதிக்க முடியும்? நல்லவர்களுக்கு ஏன் தீங்கு வருகிறது? நன்மைக்கும் தீமைக்கும் இடையே வெகுகாலமாக நடைபெற்று வருகிற போராட்டம்பற்றியும், பரலோகத்தில் லூசிபர் செய்த கலகம்பற்றியும், தீமையின் தோற்றம்பற்றியும், பாவப்பிரச்சினையை அணுகுவதில் தேவன் காட்டுகிற நீடியபொறுமைபற்றியும் ஆராய்வோம்.

நாம் நம்பமுடியாத அளவுக்கு தேவன் அன்புள்ளவர். அவர் இயல்பே அன்பு. 1யோவான் 4:7,8. அவருடைய செயல்கள் அனைத்தும் அன்புள்ளவை. எரே 31:3. அன்பைக் கட்டாயப்படுத்தவோ, வற்புறுத்தவோ, சட்டமாக்கவோ முடியாது. 'அன்பால்மட்டுமே அன்பைத் தூண்டிவிடமுடியும்' என்று எலன் ஒயிட் சொல்லியிருக்கிறார்: தெரிந்துகொள்கிற உரிமையை அழிப்பது, அன்புகூருகிற திறனை அழிப்பதாகும்; அன்புகூருகிற திறனை அழிப்பது, மெய்யான மகிழ்ச்சிக்கான சாத்தியத்தை அழிப்பதாகும். தேவன் நம்மேல் அன்புகாட்டி, நம் மெய்பற்றைப் பெறுகிறார். பாவம் இனி ஒருபோதும் எழாத அளவுக்கு நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டத்தைக் கையாளுகிறார். தாம் எப்போதும் தம் சிருஷ்டிகளின் நலனுக்காகவே செயல்படுவதை ஒட்டுமொத்த பிரபஞ்சத்திற்கும் முன்பாக எடுத்துக்காட்டுவதே தேவனுடைய நோக்கம். நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டத்தின் வெளிச்சத்தில் தேவ அன்பு எனும் கண்ணாடிவழியாகப் பார்த்தால், தீமையை நன்மை வெல்வதும், எப்போதும் அப்படியே நிகழுவதும் உறுதிப்படுகிறது.

***மாபெரும் போராட்டம், 29-30ஆம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, ஏப்ரல் 6 குப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# பரலோகத்தில் யுத்தம்

**பரலோகத்திலுள்ள காணப்படுகிற சுதந்தரம்பற்றியும், தீமையின் தோற்றம்பற்றியும் வெளி 12:7-9 என்ன சொல்கிறது? லூசிபர் கலகம்செய்தபோது, தேவன் எவ்வாறு எத்ரிவினை செய்திருக்கலாம்?**

---

நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற சர்வலோக பிரச்சினையை இந்த வசனங்கள் விவரிக்கின்றன. சாத்தானும் அவனது தூதர்களும் கிறிஸ்துவுக்கு எதிராக யுத்தம் செய்தார்கள்; இறுதியில் பரலோகத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டார்கள். பரலோகம் போன்ற பரிபூரணமான ஓர் இடத்தில், யுத்தம் உண்டானது விநோதம்தான். அது ஏன் நடந்தது? அன்புள்ள தேவன் படைத்த பிசாசான ஒரு தூதன் அதை ஆரம்பித்தானா? அவனிலிருந்த ஏதாவது குறைபாடு அவனைக் கலகம்செய்ய வைத்ததா? தீமையின் தோற்றத்தை வேதாகமம் தெளிவாக விவரிக்கிறது. நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற இந்தப் போராட்டத்தை திரைவிலக்கிக் காட்டுகிறது.

**லூசிபர் எனப்படும் இந்தத் தூதனுடைய மனதில் தோன்றின எந்த எண்ணம் அவனைக் கலகம்செய்ய வைத்தது? எசே 28:12-15; ஏசா 14:12-14.**

தேவன் ஒரு பிசாசைப் படைக்கவில்லை. லூசிபர் எனும் பிரகாசமான ஒரு ஜீவியைப் படைத்தார். இந்தத் தூதன் பூரணமானவனாகச் சிருஷ்டிக்கப்பட்டான். அந்தப் பூரண நிலையில் தெரிந்துகொள்கிற உரிமையும் அடங்கும்; தேவன் அன்பால் ஆளுகிறார், கட்டாயப்படுத்தி ஆளவில்லை என்பதற்கு அது அடிப்படை நியதி. பூரணமான இந்தத் தூதனின் இருதயத்தில் எவ்வாறு பெருமையும் பொறாமையும் இடம்பிடித்தன? தன் சிருஷ்டிகருக்கு எதிரான கலகமாக அவை மாற எவ்வாறு அவன் அனுமதித்தான் என்பதற்கு தர்க்கரீதியான விளக்கம் எதுவும் இல்லை.

சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜீவியான லூசிபர், சிருஷ்டிகருக்குமட்டுமே உரிய தொழுகையைப் பெற விரும்பினான். தேவனுடைய அதிகாரத்தில் கேள்வி எழுப்பி, அவரது சிங்காசனத்தை அபகரிக்க முயன்றான். அவனது கலகம் பரலோகத்தில் யுத்தத்திற்கு வழிவகுத்தது.

லூசிபர்மேல் தேவன் நீடியபொறுமையுடன் இருந்தார்; அவன் தன் கலகத்தால் பரலோகத்தைக் கெடுக்க அவர் அனுமதிக்க முடியாது. ‘பரலோகச் சங்கங்கள் லூசிபருடன் மன்றாடின. தேவகுமாரன் அவனிடம் சிருஷ்டிகரின் மேன்மையையும், நற்குணத்தையும், நீதியையும், தேவபிரமாணத்தின் பரிசுத்தமான, மாறாத தன்மையையும் எடுத்துரைத்தார். தேவன்தாமே பரலோகத்தின் ஒழுங்கை ஏற்படுத்தியிருந்தார்; அதிலிருந்து விலகிச்செல்லுவதினால், லூசிபர், தன்னைப் படைத்தவருக்கு கனவீனத்தையும், தனக்கு அழிவையும் ஏற்படுத்தவிருந்தான். ஆனால் எல்லையற்ற அன்பாலும், இரக்கத்தாலும் கொடுத்த எச்சரிப்பு, அவனுக்குள்ளாக எதிர்ப்பின் ஆவியை எழுப்பியது.

---

**தீமையை தேவன் அணுகும் விதத்திலிருந்து அவரது குணம்பற்றி என்ன பாடங்களைப் படிக்க முடிகிறது?**

# லூசிபர் வஞ்சிக்கிறான்; இயேசு மேற்கொள்கிறார்

பூரணமான தூதனாகிய லூசிபரின் இருதயத்தில் எவ்வாறு பெருமையும் பொறாமையும் இடம்பிடித்தன? தன் சிருஷ்டிகருக்கு எதிரான கலகமாக அவை மாற எவ்வாறு அனுமதித்தான் என்பதற்கு தர்க்கரீதியான விளக்கம் எதுவும் இல்லையென்று பார்த்தோம். சாத்தானுடைய அகந்தை வெளிப்படையான கலகமாக வளர்ந்தது. தேவன் அநீதியும் அநியாயமும் உள்ளவரெனக் குற்றஞ்சாட்டினான். தன் சந்தேகங்களையும் குற்றச்சாட்டுகளையும் தூதர்கள் மத்தியிலும் விதைத்தான்.

**சாத்தானுடைய வஞ்சகத் திறமைபற்றி வெளி 12:4 வெளிப்படுத்துவது என்ன? தேவனைப்பற்றி அவன் சொன்ன பொய்களுக்கு எத்தனை தூதர்கள் இரையானார்கள்?**

பரலோகத்தில் யுத்தம் உண்டானதும், தூதர்கள் பின்வரும் தீர்மானங்களைச் செய்ய வேண்டியிருந்தது - தாங்கள் இயேசுவின் பக்கமா, லூசிபரின் பக்கமா? இந்த யுத்தத்தின் தன்மை என்ன? உடல்ரீதியான யுத்தமா? கருத்துரீதியான யுத்தமா? அல்லது இரண்டுமா? நமக்கு விளக்கம் தெரியவில்லை; ஆனால் சாத்தானும் அவனுடைய தூதர்களும் இறுதியில் 'தள்ளப்பட்டார்கள்'; 'வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று' என்பதால் அந்தப் போராட்டம் உடல் ரீதியானதாகவும் இருந்திருக்க வேண்டும். வெளி 12:8, 9. உடலியல் சம்பந்தப்பட்ட சில கூறுகளும் அப்போராட்டத்தில் சம்பந்தப்பட்டிருக்கலாம்.

பரலோகத்தின் அந்த யுத்தம்பற்றி ஒன்று தெளிவாகத் தெரிகிறது. ஒவ்வொரு தூதனும் பின்வரும் தீர்மானத்தைச் செய்யவேண்டியிருந்தது: தாங்கள் கிறிஸ்துவின் பக்கமா, இல்லையா? யார் சொல்லுவதைக் கேட்பது? மெய்ப்பற்றுள்ள தூதர்கள் கிறிஸ்துவின் அன்பான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தீர்மானித்தார்கள்; ஆனால் மூன்றில் ஒரு பங்கு தூதர்கள் லூசிபரின் பேச்சுக்குச் செவிகொடுத்து, தேவனுக்குக் கீழ்ப்படியாமல், பரலோகத்தை இழந்தார்கள். பூலோக வரலாற்றின் இந்த இக்கட்டான நேரத்தில் நாமும்கூட, கிறிஸ்துவோடா, அவருக்கு எதிராகவா என்று தீர்மானிக்க அழைக்கப்படுகிறோம். நாமும்கூட, கிறிஸ்துவின் பக்கமா, இல்லையா என்பதை அறிவிக்கவேண்டும்.

**மாபெரும் போராட்டத்தின் என்ன அடிப்படை நியதியை பின்வரும் வசனங்கள் போதிக்கின்றன? ஆதி 2:15-17; யாத் 32:26; யோசு 24:15; 1இராஜா 18:20,21; வெளி 22:17.**

தேவன் மனிதர்களைப் படைத்தபோது, சிந்திக்கிற, பகுத்தறிகிற, தீர்மானிக்கிறதிறனை நம் மூளைக்குள்ளாக ஆழமாகப் புதைத்துவைத்தார். மனிததன்மையின் சாராம்சமே, ஒழுக்கத்தீர்மானங்களைச் செய்வதற்கான திறன்தான். நாம் வெறும் இயந்திரங்கள் அல்ல; மிருகங்களும் அல்ல. தேவசாயலில், ஒழுக்கத் தீர்மானங்களைச் செய்கிற திறனுள்ளவர்களாக, நித்திய ஆவிக்குரிய நியதிகளின்படி வாழ்கிற வகையில் சிருஷ்டிக்கப்பட்டோம். விழுகைக்குப் பிறகு, தம் மக்கள் தம் அன்புக்கு இணங்குமாறும், தமக்குச் சேவைசெய்யத் தீர்மானிக்குமாறும், தம் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுமாறு தேவன் அவர்களை அழைக்கிறார்.

---

**தீமைக்கு எதிராக நாம் எதிர்கொள்கிற போராட்டத்துடன் தொடர்புடைய பரலோக யுத்தத்திலிருந்து என்ன படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளலாம்? நீதியும் பரிசுத்தமும் உள்ள அந்தப் பரலோக ஜீவிகளையே சாத்தானால் வஞ்சிக்க முடியுமானால், நம்மை எவ்வளவு தூரம் தன் தீயவஞ்சகங்களால் வஞ்சிக்கமுடியும்?**

## பூமியும் போராட்டத்திற்குள் இழுக்கப்படுகிறது

தேவன் இந்த உலகத்தை பூரணமானதாகப் படைத்தார். 'தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது' என்று வேதாகமம் சொல்லுகிறது. ஆதி 1:31. ஒரு இடத்தில்கூட பாவத்தின் கறை காணப்படவில்லை. ஆனால் லூசிபருக்குக் கொடுத்திருந்த அதே தெரிந்துகொள்ளும் உரிமையை ஆதாம் ஏவாளுக்கும் கொடுத்திருந்தார். பரலோகத்தில் ரோபோக்களைப் படைக்க விரும்பாததுபோல பூமியிலும் அவர் ரோபாக்களைப் படைக்க விரும்பவில்லை.

அந்த உரிமையை உறுதிசெய்வதற்கான முயற்சியும் எடுத்தார். அந்தத் தோட்டத்தில் ஒரு விருட்சத்தை வைத்து, அதை நன்மை தீமை அறியத்தக்க விருட்சமென அழைத்தார். அது குறித்து ஆதாம்- ஏவாளிடம் அவர் சொன்னதற்கு ஒரு நோக்கம் இருந்தது; தீர்மானிக்கிற உரிமை அவர்களுக்கு இருப்பதை அவர்கள் அறியவேண்டும் என்பதே அந்த நோக்கம்.

ஒருநாள் சாத்தான் அந்த விருட்சத்திடம் வந்தபோது, ஏவாள் அங்கே சுற்றிக்கொண்டிருந்தாள்; அவளிடம் 'நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்' என்று சொன்னான். அதாவது, 'நீங்கள் இந்த விருட்சத்தின் கனியைப் புசித்தால், வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்தை எட்டலாம், சுவாரசியத்தைப் பெறலாம்; இதற்கு முன் பெற்றிராத சிலிர்ப்பைப் பெறலாம், ஏவாளே, தேவன் உன்னிடமிருந்து எதையோ மறைக்கிறார், விலக்கப்பட்ட கனியைப் பறித்துப் புசித்துவிடு' என்பதுபோலப் பேசினான்.

முதலில் ஏவாளும், பிறகு ஆதாமும் அதைப் புசித்தபோது, தேவன் அடைத்தே வைக்க விரும்பியிருந்த ஒரு கதவைத் திறந்துவிட்டார்கள். அது பாவத்திற்கு நேரான வழி - உபத்திரவம், மனவேதனை, வியாதி, மரணம் ஆகியவற்றிற்கு நேரான வழி.

**ஆதி 3:1-3; ரோமர் 3:23; 5:12 ஆகிய வசனங்கள் சொல்கிற செய்தி என்ன? மனுக்குலம் முழுவதையும் வாதிக்கிற பாவத்தின் விளைவுகளை விவரியுங்கள்.**

பாவம் என்பது தேவனுக்கு எதிரான கலகம். தேவனைவிட்டு பாவம் நம்மைப் பிரிக்கிறது. தேவனே ஜீவனின் ஆதாரமாக இருப்பதால், தேவனிடமிருந்து பிரிவது மரணத்தைக் கொண்டுவருகிறது. அது கவலை, பதற்றம், வியாதி, நோய் ஆகியவற்றையும் கொண்டுவருகிறது. பாவம் பீடித்த ஒரு உலகத்தில் வாழ்வதின் விளைவுதான் பாடுகள். அதற்காக ஒவ்வொரு சமயத்திலும் பாவத்தால்தான் உபத்திரவம் வருகிறது என்றில்லை. இந்த உலகத்தில் வாழ்வதால்தான் பாடு வருகிறது என்றும் இல்லை.

---

**ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த பிறகு, நம்பிக்கையற்ற அந்த நிலையில் அவர்களுக்கு நம்பிக்கை யூட்டுவதற்கு தேவன் கொடுத்த வாக்குறுதி என்ன? ஆதி 3:15; லேவி 5:5,6; யோவான் 1:29. ஏதேனில் தேவன் அவர்களுக்குச் செய்த என்ன ஊழியம், நூற்றாண்டுகள் நெடுகிலும் பாவத்திற்கான தீர்வை அவர்களுக்குக் காட்டியது?**

# அன்பு கண்டுபிடித்த ஒரு வழி

ஆதாமும் ஏவாளும் பாவம்செய்து விட்டார்கள். அந்தத் தோட்ட வீட்டை விட்டு அவர்கள் வெளியேற வேண்டும் என்று தேவன் சொன்னார். அதுமுதல், வேலை கடினமாக மாறியது; பாடுகள் வந்தன. பாடுகளை அனுபவித்து, இறுதியில் எந்த நம்பிக்கையும் இல்லாமல் மரிப்பதுதான் முடிவா? எல்லாம் மரணத்தோடு முடிந்துபோகுமா?

அந்தக் கட்டத்தில்தான் ஆதி 3:15இல் உள்ள வாக்குறுதியை அவர்களுக்கு தேவன் கொடுத்தார். சர்ப்பமாகிய சாத்தானை நேருக்கு நேராகப் பார்த்து, 'உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்' என்றார். அதன் அர்த்தம்பற்றி அந்தச் சமயத்தில் அவர்களுக்கு முழுவதும் புரியாமல் இருந்திருக்கலாம்; ஆனால் தங்களுக்கு புதிய நம்பிக்கை பிறந்ததைப் புரிந்துகொண்டார்கள். 'ஸ்திரீயின் வித்து' மூலமாக, அவர்களுக்கு மீட்பு கிடைக்கவிருந்தது.

'ஸ்திரீயின் வித்து' இயேசு கிறிஸ்து. கலா 3:16. சிலுவையில், சாத்தான் அவருடைய குதிகாலை நசுக்கினான். ஆனால் ஒருநாளில் சர்ப்பத்தின் தலை நசுக்கப்படுவதற்கு இயேசுவின் வெற்றிதான் நம் அச்சாரமாக இருக்கிறது. ஆதாமும் ஏவாளும் திறந்துவிட்ட மரணத்தின் வாசல் ஒருநாளில் மூடப்படும்.

**சிலுவையில் கிறிஸ்து இட்ட பலியின் மகத்துவம்பற்றி எபி 2:9; கலா 3:13; 2கொரி 5:21 சொல்லுவது என்ன?**

தேவன் உண்மையில் என்னை நேசிக்கிறாரா என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? சிலுவையைப் பாருங்கள் - அவரது முள்முடியையும், கைகளிலும் கால்களிலும் அறையப்பட்ட ஆணிகளையும் பாருங்கள். கல்வாரியில் இயேசு சிந்தின ஒவ்வொரு சொட்டு இரத்தத்தின்மூலாகவும் தேவன், 'நான் உன்னை நேசிக்கிறேன். நீ இல்லாத பரலோகத்தை நான் விரும்பவில்லை. ஆம், நீ பாவம் செய்துவிட்டாய்; எதிரியின் கையில் உன்னை விற்றுப்போட்டாய்; ஆம், உன் தகுதியின்படி நித்தியவாழ்வுக்கு நீ தகுதியற்றவன்தான். ஆனால் உன்னை மீட்பதற்கான விலையைச் செலுத்தியிருக்கிறேன்' என்கிறார். சிலுவையில், தேவன் என்னை நேசிக்கிறாரா என்கிற கேள்வி எழத் தேவையே இல்லை.

இயேசு இந்த உலகத்திற்கு வந்தார்; எல்லா மனிதர்களையும்போல மன வேதனை, ஏமாற்றம், பாடுகள் ஆகியவற்றிற்கு ஆளானார். நம்மைப் போல அவர் சோதிக்கப்பட்டார். தமது வாழ்விலும், சிலுவை மரணத்திலும் நரகத்தின் வல்லமைகளுக்கும் துரைத்தனங்களுக்கும் எதிராக வெற்றிபெற்றார். இவை அனைத்தையும் நம் ஒவ்வொருவருக்காகவும் செய்தார்.

பிரபஞ்சம் முழுவதையும் சிருஷ்டித்த இயேசுதாமே (யோவான் 1:3), பரலோகத்திலிருந்து இறங்கி, விழுந்துபோன இந்த உலகத்திற்கு வந்து, நாம் எவரும் ஒருபோதும் அனுபவித்திராத பாடுகளை அனுபவித்தார். ஏசா 53:1-5. நாம் நம்பிக்கைவைக்க எவ்வளவு பெரிய காரணம் இது!

---

**சாத்தானின் குற்றச்சாட்டுகளுக்கு சிலுவையில் இயேசு எவ்வாறு பதிலளிக்கிறார்? நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டத்தின் வெளிச்சத்தில், இயேசுவின் மரணம் நிறைவேற்றியது என்ன?**

# நம் பிரதான ஆசாரியன்

சிலுவையில் இயேசு நமக்காகச் செய்ததே பரலோகத்தில் நமக்காகப் பரிந்து பேச அவரைத் தகுதிப்படுத்தியிருக்கிறது. உயிர்த்தெழுந்த நம் ஆண்டவர்தாம் நம் பிரதான ஆசாரியர்; நாம் இரட்சிக்கப்படுவதற்கும், தேவனுடைய ராஜ்யத்தில் என்றென்றும் வாழ்வதற்கும் தேவையான அனைத்தையும் கொடுக்கிறார்.

**பாவத்தூண்டல்களும் பாடுகளும் வியாதிகளும் மரணமும் நிறைந்த ஓர் உலகத்தில் பின்வரும் வசனங்கள் எவ்வாறு நமக்கு நிச்சயத்தைக் கொடுக்கின்றன? எபி 4:15,16; 7:25.**

'எல்லாவிதத்திலும்நம்மைப்போல்சோதிக்கப்பட்டும்,பாவமில்லாதவராய் இருக்கிறார்'. எபி 4:15. மேலும், 'நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்' - அதாவது நம்பிக்கையோடு - 'கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்'. எபி 4:16.

கிறிஸ்து தமது நீதியை நமக்குத் தரிப்பித்து, தமது மரணத்தால் நம்மை இரட்சித்து, தமது இரத்தத்தால் நம்மை மீட்டு, பிரபஞ்சத்திற்குமுன் நம்மை நிறுத்துகிறார். நாம் அனுபவிக்கவேண்டிய அனைத்தையும் அனுபவித்தார். கிறிஸ்துவுக்குள் நம் கடந்தகால பாவங்களுக்கு ஆக்கினையே இல்லை. கிறிஸ்துவுக்குள் நம் குற்றங்கள் ஒழிந்துபோகின்றன; அவருடைய வல்லமையான பரிந்துபேசுதலால் நம் வாழ்க்கையில் பாவத்தின் பிடி தளர்ந்துபோகிறது. நம்மைக் கட்டியிருக்கிற கட்டுகள் அவிழ்ந்து, விடுவிக்கப்படுகிறோம்.

**நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கிற போராட்டத்தில் கிறிஸ்துவின் வாஞ்சை என்ன? யோவான் 17:24-26.**

'அந்த மாபெரும் தியாகபலி ஏறெடுக்கப்பட்டு முடிந்ததும், கிறிஸ்து பரலோகம் ஏறிச்சென்றார்; "நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே அவர்களும் (நீர் எனக்குத் தந்தவர்கள்) என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்" என்கிற மன்றாட்டை அவர் முன்வைக்கும்வரை, தேவதூதர்களின் தொழுகையை ஏற்க மறுத்தார். யோவான் 17:24. அப்பொழுது விவரிக்க முடியாத அன்போடும் வல்லமையோடும் தேவனுடைய சிங்காசனத்தில் இருந்து இவ்வாறு பதில் வந்தது; "தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவார்கள்" எபி 1:6. இயேசுவின் மீது ஒரு கறைகூட இருக்கவில்லை. அவருடைய நிந்தை முடிவடைந்தது; பலி நிறைவேறியது; எல்லா நாமங்களுக்கும் மேலான ஒரு நாமம் அவருக்குக் கொடுக்கப்பட்டது'. நாம் அவரோடு பரலோகத்தில் இருப்பதைதவிர வேறு எதையும் இயேசு விரும்பவில்லை. அவரது இருதயத்தின் வாஞ்சையும், அவர் நமக்காக மரித்து, உயிர்த்தெழுந்து பரிந்துபேசுவதின் காரணமும் நம்மை இரட்சிப்பதே. உங்கள் வாழ்க்கையில் ஏதாவது விசேஷித்த தேவை இருக்கிறதா? அதை இயேசுவிடம் சொல்லுங்கள். துக்கம் இருக்கிற இடத்தில், ஆறுதலைக் கொடுக்கிறார். பயம் இருக்கிற இடத்தில், சமாதானத்தைக் கொடுக்கிறார். பெலவீனம் இருக்கிற இடத்தில் பெலத்தைக் கொடுக்கிறார்.

---

**கிறிஸ்து எதற்காக தம்மை நமக்காகப் பலியாக்கினார்? நம்மை அவ்வளவு மதிப்புமிக்கவர்களாக அவர் கருதுவது ஏன்?**

# மேலும் படிக்க:

"சாத்தானை பரலோகத்திலிருந்து வெளியேற்றியதில், தேவன் தமது நீதியை அறிவித்தார்; தம் சிங்காசனத்தின் மேன்மையைக் காத்துக்கொண்டார்; ஆனால் இந்தத் தேவதுரோக ஆவியின் வஞ்சனைகளுக்கு இணங்கி, மனிதன் பாவம் செய்தபோது, விழுந்துபோன இனத்தினருக்காக மரிக்கும்படி தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைக் கொடுத்து, தம் அன்பிற்கு ஓர் ஆதாரத்தைக் கொடுத்தார். அந்தப் பாவநிவாரணத்தில் தேவனுடைய குணம் வெளிப்பட்டுள்ளது. லூசிபர் தெரிந்துகொண்ட பாவமார்க்கத்திற்கு தேவனுடைய அரசாங்கத்தை எந்த வகையிலும் குற்றஞ்சொல்ல முடியாது என்பதை சிலுவையின் வலிமையான வாதமானது ஒட்டுமொத்த பிரபஞ்சத்திற்கும் நிரூபித்துக் காட்டுகிறது".

"நியாயப்பிரமாணம் மாறாதது என்று கல்வாரி சிலுவை சொல்லுகிற அதே வேளையில், பாவத்தின் சம்பளம் மரணம் என்பதையும் பிரபஞ்சத்திற்கு சிலுவை அறிவிக்கிறது. இரட்சகர் தம்முடைய மரணதறுவாயில், 'முடிந்தது' என்று கதறியதில் சாத்தானுக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. நீண்டகாலமாக நடைபெற்று வந்த மாபெரும் போரட்டம் அப்போது முடிவு செய்யப்பட்டது; தீமை இறுதியாக அகற்றப்படுவது உறுதியானது. தேவகுமாரன், 'மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு' கல்லறைகளின் வாசல்களைக் கடந்துசென்றார். எபி 2:14.'

---

### கலந்துரையாடக் கேள்விகள்

**1** *லூசிபர் கலகம்செய்வான் என்பதை தேவன் அறிந்திருந்தால், எதற்காக அவனுக்கு தெரிந்துகொள்ளுகிற சுதந்திரத்தைக் கொடுத்திருக்க வேண்டும்? லூசிபர் கலகம் செய்தபோது, அவனை உடனடியாக தேவன் ஏன் அழிக்கவில்லை? தேவன் உடனடியாக லூசிபரை அழித்திருந்தால், விழுந்துபோகாத பிரபஞ்ச ஜீவிகள்மத்தியில் அது எப்படிப்பட்ட எதிர்வினையை உண்டாக்கியிருக்கும்? மாபெரும் போராட்டத்தைப் புரிந்துகொள்வதற்கு, இரட்சிப்பின் திட்டத்தில் பிரபஞ்சத்தின் நலனே முக்கியமாக இருக்கிறது என்கிற கருத்து ஏன் முக்கியமானது? 1பேதுரு 1:12; வெளி 5:13; 16:7.*

**2** *சிலுவையில் கிறஸ்து மரித்ததற்கு என்ன காரணங்கள் இருக்கலாம்? தேவனுடைய குணத்தை வெளிப்படுத்துவதற்கு மட்டுமா? பாவத்திற்கான விலையைச் செலுத்துவதற்கு மட்டுமா? ஆம் என்றால், யாருக்காக விலை செலுத்தப்பட்டது? உங்கள் கருத்துகளைப் பகிருங்கள்; அவற்றிற்கு வேதாகம காரணங்களைக் கொடுங்கள்.*

**3** *'மாபெரும் போராட்டம்' என்கிற வார்த்தைகள்மூலம், நாம் சுட்டிக்காட்ட விரும்புகிற கருத்து என்ன? மாபெரும் போராட்டத்தின் பல்வேறு அம்சங்கள்பற்றியும், இந்த வாரப்பாடம் எவ்வாறு உங்கள் சொந்த வாழ்க்கைக்குப் பொருந்தும் என்பது பற்றியும் விவாதியுங்கள்.*

**4** *மாபெரும் போராட்டத்தின் எதார்த்தம்பற்றிப் பேசுகிற வேத வசனங்கள் யாவை? யோபு 1; 2; எபே 6:12.*

**5** *மற்ற கிறிஸ்தவச் சபைகளைவிட செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபையின் நம்பிக்கை எவ்வாறு தனித்துவமானது? மாபெரும் போராட்டத்திலுள்ள என்ன கருத்து அட்வென்டிஸ்டுகளை வேறுபடுத்திக் காட்டுகிறது?*

# எரிமலைகளும் கோவிட் - 19ம்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

கேனரி தீவுகளில் மிகப்பெரிய ஒரு சவாலைச் சந்தித்தார் கியூபாவைச் சேர்ந்த நற்செய்தி ஊழியரான மிஸாயேல் டெல்கடா ராட்ரிக்வெஸ்.

லா பால்மா தீவில் முன்னாள் சபை உறுப்பினர்களையும் பிற மக்களையும் சந்தித்து, மும்முரமாக ஊழியம் செய்து வந்தார் மிஸாயேல். ஒரு மாதம் கழித்து, முதன்முதலாக ஒருவர் ஞானஸ்நானம் பெற்ற போது மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். பிறகு கோவிட்–19 நிமித்தம் ஊழியம் செய்ய முடியவில்லை. அவருக்கு பல பிரச்சனைகள் எழுந்தன. தீவின் வடபகுதியில் பெருந்தீ ஏற்பட்டு, அங்கத்தினர்கள் அநேகர் வீடுகளை இழந்தார்கள். பிறகு 85 நாட்களாக எரிமலை குமுறிக்கொண்டிருந்தது. அதனால் பூமியதிர்ச்சிகள், விஷவாயு, சாம்பல் என தீவு வாசிகள் பெரும் இடருக்கு ஆளானார்கள். சபையைச் சேர்நத இரு குடும்பத்தினர் அனைத்தையும் இழந்தார்கள்.

புயல்கள் அச்சுறுத்தினாலும், விசுவாசம் மலர்ந்தது. மிஸாவேல் அங்கு சென்று மூன்று வருடங்களுக்கு பிறகு, 45 பேர் ஓய்வுநாள் ஆராதனையில் தொடர்ந்து கலந்துகொண்டு வந்தார்கள். அதுபோக, ஏழுபேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்; ஐந்துபேர் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாகினார்கள்; 15 பேர் வேத ஆராய்ச்சி வகுப்புகளில் கலந்து கொண்டார்கள். அதற்கு காரணம்? பரிந்துபேசுதலின் ஜெபமென மிஸாயேல் சொன்னார். “காலை 7மணி, மதியம் 2 மணி, மாலை 9 மணிக்கு ஜெபிக்கிறோம். ஒவ்வோர் அங்கத்தினரும் ஐந்து பேருக்கு ஜெபிக்கிறார்” என்று சொன்னார்.

சபையின் ஒவ்வோர் இலாகாவும் நடைமுறை ஊழியத்தில் ஈடுபட்டது. ஸ்பானிஷ் சபை ஒன்றியத்தின் முயற்சியால், ஒவ்வொருவரையும் தொலைபேசியில் தொடர்புகொண்டு, எலன் ஒய்ட் எழுதின கிறிஸ்துவிடம் செல்லும் வழி மற்றும் அது சம்பந்தப்பட்ட வேதப்பாடங்களைக் கொடுக்கிற ஊழியம் செய்யப்பட்டது. இதுபோக பிற ஊழியங்களும் அடங்கும்.

பிறகு ஊழியப்பயிற்சிக்காக சீடத்துவப் பள்ளி ஒன்றை சபை ஆரம்பித்தது; மேலும், வீடுகளில் வைத்து நான்கு சிறு குழுக்கள் நடைபெற்று வந்தன.

நட்பு ஊழியம் எனப்பட்ட ஊழியமும் வெற்றி கரமாக நடைபெற்றதாக மிஸாயேல் சொன்னார். எரிமலை எரிந்துகொண்டிருந்த நாட்களில், சபை அங்கத்தினர்கள் இரு மாதங்கள் முகக்கவசங்களை வழங்கியும், எரிமலை சம்பந்தமாக ஆரோக்கியம் பேணுதல் குறித்த பிரதிகளை வழங்கியும் ஊழியம் செய்தார்கள். “இவ்வாறு திருச்சபை பிரபலமடைந்தது” என்று மிஸாயேல் சொன்னார். வேதவகுப்புகளில் கலந்துகொண்ட 15 பேர்களில் பலர் எரிமலையில் கிட்டத்தட்ட அனைத்தையும் இழந்திருந்தார்கள்; அந்த நெருக்கடிதான் தங்களை தேவனிடம் வழிநடத்தியதாகச் சொன்னார்கள். “இல்லையெனில், தேவனைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருந்திருக்க மாட்டார்கள்” என்று சொன்னார்.

கேனரி தீவுகளில் ஏற்பட்ட அனுபவம் மகிழ்ச்சியானதென மிஸாயேல் கூறுகிறார். “ஆரம்பம் கடினமாக இருந்தது. பல இன்னல்களைச் சந்தித்தோம். ஆனால் முடிவுகள் மனதிருப்தியாக இருக்கின்றன. தேவன் எங்களை ஆசீர்வதித்த வழிகளைப் பார்த்தோம்” என்று சொன்னார்.